நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.எண்.37/2018

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: இளையராஜா வயது: 30

த/பெ.(அ)க.பெ: ராஜா தொழில்: டிரைவர்

ஊர் : ஜங்களாபுரம் சமயம்: இந்து

வட்டம் : நாட்றம்பள்ளி சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் ஜங்களாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 24.09.2017ம்தேதியன்று இரவு 10.00 மணியளவில் நாட்றம்பள்ளி புது பஸ் ஸ்டாண்ட் அருகே நான் எனது ஆட்டோவை நிறுத்த முயற்சி செய்த போது, அங்கு உட்கார்ந்திருந்த ஆஜர் எதிரி ஆட்டோவை நிறுத்தக்கூடாது என்று சொன்னார். நான் சற்று நேரத்தில் எடுத்து விடுவதாக சொன்னேன்.அதற்கு அவர் என்னை பார்த்து ங்கோத்தா ஓம்மா என அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த பாட்டிலால் என் தலை மீது அடித்தார். பின்னர் தலையில் அடிப்பட்டதால் நான் திரும்பிய போது எனது வயிறு பக்கவாட்டில் அடி விழுந்தது. எதிரி அடித்ததால் எனது தலை மற்றும் வயிறு பக்கவாட்டில் காயம் ஏற்பட்டது. அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் வந்து என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். எதிரி என்னை அடிக்க பயன்படுத்திய பாட்டிலை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும்.தற்போது என்னிடம் காட்டப்படும் பாட்டிலால் தான் ஆஜர் எதிரி என்னை குத்தி காயம் ஏற்படுத்தினார். அந்த உடைந்த பாட்டில் சா,பொ.1 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.எண்.37/2018

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: ராஜா வயது: 52

த/பெ.(அ)க.பெ: பொன்னுசாமி தொழில்: கூலி

ஊர் : ஜங்களாபுரம் சமயம்: இந்து

வட்டம் : நாட்றம்பள்ளி சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் ஜங்களாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூடை பின்னும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு எனக்கு தேதி சரியாக நினைவில்லை. நான் வெளியில் சென்றுவிட்டு சுமார் இரவு 10.30 மணிக்கு நாட்றம்பள்ளி பேருந்து நிலையத்திற்கு வந்தேன். எனது மகன் அ.சா.1 ஆட்டோ ஓட்டுகிறார். பேருந்து நிலையத்தில் அவர் இருப்பார் என்று பார்த்து தேடினேன்.அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். இரவு 11.30 மணியளவில் சாட்சி நந்தகோபால் என்பவர் எனக்கு போன் செய்து என்னுடைய மகனை விக்னேஷ் என்பவர் தாக்கி பாட்டிலால் குத்திவிட்டதாகவும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் சொன்னார். நான் பிறகு நான் மருத்துவமனையில் வந்துபார்த்ததேன். எனது மகனுக்கு சிகிச்சை அளித்து தையல் போட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

இல்லை